06.03.2017

தி இந்து
தமிழால் இணைவோம்

# சென்னை, காஞ்சிபுரம் உட்பட 7 மாவட்டங்களில் ரூ.1,486 கோடியில் புதிய திட்டங்கள்: முதல்வர் எடப்பாடி பழனிசாமி காணொலி காட்சி மூலம் தொடங்கி வைத்தார்



முதல்வர் எடப்பாடி பழனிசாமி | கோப்புப் படம்.

சென்னை உட்பட 7 மாவட்டங்களில் ரூ.1,486 கோடியில் முடிவடைந்த திட்டப் பணிகளை முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி தொடங்கி வைத்தார். 2 புதிய திட்டங்களுக்கும் முதல்வர் அடிக்கல் நாட்டினார்.

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர், கடலூர், விழுப்புரம் ஆகிய 7 மாவட்டங்களில் பல்வேறு துறைகளின் சார்பில் ரூ.1,486 கோடியே 12 லட்சம் மதிப்பில் புதிய திட்டப் பணிகள் தொடக்க விழா சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று நடந்தது. விழா வுக்கு வந்தவர்களை தலைமைச் செயலாளர் கிரிஜா வைத்தியநாதன் வரவேற்று பேசினார்.

ரூ.1,375 கோடியே 95 லட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ள 7,506 திட்டப்பணிகளை காணொலி காட்சி மூலம் முதல்வர்

எடப்பாடி பழனிசாமி தொடங்கி வைத்தார். காஞ்சிபுரம் மாவட்டத்தில் ரூ.83.83 கோடி மதிப்பீட்டில் கைத்தறி பட்டு பூங்கா அமைக்கவும், திருவண்ணாமலை மாவட்டம் வாழவச்சனூரில் உள்ள புதிய வேளாண்மை கல்லூரி வளாகத்தில் ரூ.27.20 கோடியில் மாணவர், மாணவிகள் விடுதி, புதிய வகுப்பறைகள் கட்டவும் முதல்வர் அடிக்கல் நாட்டினார். காவல்துறை, தீயணைப்புத் துறை யினருக்காக வாங்கப்பட்ட புதிய ஜீப்புகள், பைக்குகள், தீயணைப்பு வண்டிகள், ராட்சத ஏணி கொண்ட மீட்பு வாகனம், மிதவைப் படகுகள், உள்ளிட்ட வாகனங்களையும் முதல்வர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

விழாவில் முதல்வர் பேசிய தாவது:

தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டுசெல்லும் முனைப்போடு 2016-ம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலுக்கான அதிமுக தேர்தல் அறிக்கையில் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அளித்த வாக்குறுதி களை நிறைவேற்றவும், தமிழக மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் பதவியேற்ற முதல் நாளிலேயே 5 சிறப்பு திட்டங்களுக் கான கோப்புகளில் கையெழுத் திட்டேன்.

அதைத் தொடர்ந்து சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் ஆகிய 7 மாவட்டங்களில் ரூ.1,375 கோடியே 95 லட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ள 7,506 திட்டப்பணிகளை காணொலி காட்சி மூலம் இன்று தொடங்கி வைத்துள்ளேன். மேலும், ரூ.111 கோடியே 3 லட்சம் மதிப்பீட்டில் 2 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

**தொடங்கி வைத்த திட்டங்கள்**

அயோத்தியா குப்பத்தில் ரூ.81 கோடியே 48 லட்சத்தில் 1,128 குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் உட்பட சென்னை மாவட்டத்தில் மொத்தம் ரூ.577 கோடியே 34 லட்சத்தில் 1,583 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.6 கோடியே 50 லட்சத்தில் கட்டப்பட்டுள்ள மீன் இறங்கு தளங்கள், ரூ.7 கோடியே 16 லட்சத்தில் அமைக்கப்பட்டுள்ள 110 கிலோ வோல்ட் துணை மின்நிலையம் உட்பட கடலூர் மாவட்டத்தில் மொத்தம் ரூ.53 கோடியே 4 லட்சத்தில் 208 பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

இருங்காட்டுக்கோட்டை, வல்லம், வடகல் பகுதியில் ரூ.21 கோடியே 93 லட்சத்தில் சரக்கு வாகன முனையம், வண்டலூர் கூடுவாஞ்சேரி இடையே ரூ.57 கோடியே 14 லட்சத்தில் நெடுஞ்சாலைத் துறை மூலம் கட்டப்பட்டுள்ள ரயில்வே மேம்பாலம் உட்பட 3 பாலங்கள் என காஞ்சிபுரம் மாவட்டத்தில் மொத்தம் ரூ.205 கோடியே 42 லட்சத்தில் 96 திட்டப் பணிகள் முடிக் கப்பட்டுள்ளன.

திருவண்ணாமலை மாவட்டத் தில் துணை மின் நிலையங்கள், புதிய கட்டிடங்கள் என மொத்தம் ரூ.192 கோடியே 17 லட்சத்தில் 3,112 பணிகளும், கூடப்பாக்கம் கிராமத்தில் ரூ.71 கோடியே 44 லட்சத்தில் குடிசை மாற்று வாரியம் மூலம் கட்டப்பட்ட 1,024 குடியிருப்புகள் உட்பட திருவள்ளூர் மாவட்டத்தில் மொத்தம் ரூ.285 கோடியே 4 லட்சம் மதிப்பீட்டிலான 1,731 பணிகளும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

வேலூர் மாவட்டத்தில் இச்சி புதூர் கிராமத்தில் ரூ.12 கோடியே 75 லட்சத்தில் துணை மின் நிலையம், காவல்துறை வீட்டு வசதி வாரியம் மூலம் ரூ.23 கோடியே 81 லட்சத்தில்

164 குடியிருப்புகள், 4 காவல் நிலையங்கள் உட்பட ரூ.92 கோடியே 6 லட்சத்தில் 307 பணிகளும் விழுப்புரம் மாவட்டத் தில் காவல்துறை வீட்டு வசதி வாரியத்தால் ரூ.29 கோடியே 77 லட்சத்தில் கட்டப்பட்ட 92 குடியிருப் புகள் மற்றும் 4 காவல் நிலையங்கள் உட்பட ரூ.81 கோடியே 46 லட்சத்தில் 471 பணிகளும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த 7 மாவட்டங்களிலும் மொத்தம் ரூ.1,486 கோடியே 12 லட்சம் செலவில் முடிக்கப்பட்ட பணிகளையும், புதிய திட்டப் பணிகளையும் தொடங்கி வைத்துள்ளேன். இவற்றில் பெரும் பாலான திட்டங்கள், சட்டப்பேரவை யில் விதி 110-ன் கீழ் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அறிவித்த திட்டங்களாகும். ஜெயலலிதாவுக்கு வழங்கிய ஒத்துழைப்பு போலவே அவரது வழியில் நடக்கும் இந்த அரசுக்கும் தமிழக மக்கள் தொடர்ந்து ஆதரவு அளிக்க வேண்டும்.

இவ்வாறு முதல்வர் பேசினார்.

விழாவில் திண்டுக்கல் சீனி வாசன், செங்கோட்டையன் உள் ளிட்ட அமைச்சர்கள், துறை செயலா ளர்கள், எம்.பி., எம்எல்ஏக்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தினமணி

**சாகுபடியில் புதிய ரகங்களை உருவாக்கிய புதுச்சேரி விவசாயிக்கு தேசிய விருது**



தில்லி குடியரசுத் தலைவர் மாளிகை வளாகத்தில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில், புதுச்சேரி விவசாயி டி.வெங்கடபதி ரெட்டியாருக்கு தேசிய விருதை வழங்குகிறார் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி.

கனகாம்பரம், சவுக்கு மரம் சாகுபடியில் புதிய ரகங்களையும், நவீன தொழில்நுட்ப உத்திகளையும் உருவாக்கிய புதுச்சேரியைச் சேர்ந்த விவசாயி டி.வெங்கடபதி ரெட்டியாருக்கு தேசிய விருதை குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி வழங்கினார்.

தில்லியில் உள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில், "9-வது புதுமைக் கண்டுபிடிப்புகள் மற்றும் பாரம்பரிய அறிவுக்கான தேசிய விருது-2017' வழங்கும் விழா சனிக்கிழமை நடைபெற்றது.

தேசிய புதுமைக் கண்டுபிடிப்புகள் அறக்கட்டளையின் ஒத்துழைப்பில் நடைபெற்ற இந்த விழாவில் பல்வேறு புதுமைக் கண்டுபிடிப்புகளுக்காக நாட்டின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 15 பேருக்கு தேசிய விருதுகளும், பலருக்கு மாநில விருதுகளும் வழங்கப்பட்டன.

இதில், கனகாம்பரம், சவுக்கு மரம் ரகங்களில் புதிய தொழில்நுட்பத்தையும், ரகங்களையும் உருவாக்கியதற்காக புதுச்சேரி விவசாயி டி.வெங்கடபதி ரெட்டியாருக்கு தேசிய விருது (முதல்) வழங்கப்பட்டது. குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி இந்த விருதை வழங்கினார். விருது பெற்ற விவசாயி டி.வெங்கடபதி ரெட்டியார் தனது விவசாய அனுபவம், மலர்ச் சாகுபடியின் புதிய ரகங்கள் உருவாக்கம் ஆகியவை குறித்து "தினமணி' நிருபரிடம் கூறியதாவது:

புதுச்சேரி அருகே உள்ள கூடப்பாக்கம் கிராமம்தான் எனது சொந்த ஊர். எங்கள் குடும்பம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டது. இளமைப் பருவத்தில் விளையாட்டு வீரராக இருந்தேன். ஆரம்பக் கல்வியைக் கூட முடிக்கவில்லை. திருமணத்திற்குப் பிறகு வாழ்க்கையை நடத்த பொருளாதார வசதி இல்லை. மிகவும் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டேன். எச்சில் இலை சோற்றை உண்ணும் நிலைகூட ஏற்பட்டது.

இந்நிலையில், பெரியகுளம் தோட்டக்கலைத் துறை இயக்குநராக இருந்த சம்பந்த மூர்த்தியை நேரில் சந்தித்து உதவி கேட்டேன். அவர் எனக்கு சில கனகாம்பரம் செடிகளைக் கொடுத்து, "பிறப்பு முதல் இறப்பு வரை மனிதனின் கூடவே வருவது மலர் ஒன்றுதான்; இந்தக் கனகாம்பரம் மலர் சாகுபடியில் ஈடுபடு. அது உன்னைக் கைவிடாது' என்று கூறினார். அந்தச் செடிகளை வைத்து ஒரு சென்ட் நிலத்தில் நானும் எனது மனைவி விஜயாளும் சாகுபடியைத் தொடங்கினோம். சிறிது பலன் கிடைத்தது.

இந்நிலையில், புதுவையில் மலர்க் கண்காட்சியில் கனகாம்பரம் செடி ரூ.500-க்கு விற்பனையாகிக்

கொண்டிருந்தது. நானோ ரூ.5-க்கு செடியைத் தருவதாக விவசாயத் துறை இயக்குநரிடம் கூறினேன். இதையடுத்து, உடனடியாக 1 லட்சம் கனகாம்பரம் செடிகளை வழங்குமாறு என்னிடம் வேளாண் துறையினர் ஆர்டர் கொடுத்தனர். பனியறை முறையில் நடவு செய்து ஒரு லட்சம் கனகாம்பரம் செடியை உருவாக்கினேன். மறு ஆண்டில் நடைபெற்ற மலர்க் கண்கட்சியில் 1 லட்சம் செடிகளை விவசாயத் துறையிடம் வழங்கினேன். ரூ.2.50- மானியத்தில் அந்தச் செடிகளை அத்துறையினர் விற்பனை செய்தனர்.

இதனால், ஒரு மணிநேரத்தில் அவை அனைத்தும் விற்றுத் தீர்ந்தன. உடனடியாக எனக்கு ரூ.5 லட்சத்திற்கான காசோலையும் வழங்கப்பட்டது. இதன் பிறகு மனைவி உள்பட எல்லோரும் என்னைப் பாராட்டினர். இந்நிலையில், 1996-ல் அப்துல் கலாம் குடியரசுத் தலைவராக இருந்த போது என்னையும், எனது மகள் லட்சுமியையும் பாராட்டி ஊக்குவித்தார். அவரது ஊக்குவிப்பின் காரணமாக, "காமா கதிர்வீச்சு' முறை மூலம் கனகாம்பரம், சவுக்கு மரம் ஆகியவற்றில் புதிய ரகங்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டேன். இதற்கு சென்னை கல்பாக்கம் அணு மின் நிலையத்தினர் தேவையான உதவிகளைச் செய்தனர்.

இதேபோன்று, ரசாயன முறை, அயல் மகரந்தச் சேர்க்கை முறை ஆகியவற்றின் மூலம் கனகாம்பரத்தில் மட்டும் 300-க்கும் மேற்பட்ட புதிய ரகங்களை உருவாக்கினேன். இதைத் தொடர்ந்து, மத்திய அரசு விவசாயத் துறை பிரிவில் நாட்டிலேயே முதல் முறையாக எனக்கு 2012-இல் பத்மஸ்ரீ விருதை வழங்கியது. அதைத் தொடர்ந்து, அமெரிக்க பல்கலை., தஞ்சாவூர் பெரியார் மணியம்மை பல்கலை. ஆகியவை டாக்டர் பட்டங்கள் வழங்கி கௌரவித்தன.

தற்போது குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியின் மூலம் தேசிய விருதைப் பெற்றது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது. சவுக்கு மரத்தில் ஐந்து ஆண்டுக்கு 200 டன் மகசூல் தரும் வகையில் புதிய உத்திகளைக் கண்டுபிடித்துளேன். அதேபோன்று, ஒரே செடியில் கத்தரி, மிளகாய், தக்காளி உற்பத்தி செய்யும் ரகத்தையும் உருவாக்கியுள்ளேன்.

இச்செடி ஐந்து ஆண்டுகள் நிலைத்து நின்று பலன் தரும். எனது நோக்கமெல்லாம் இந்தியாவில் உள்ள ஏழு லட்சம் கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள், இளைஞரிடம் நான் கண்டுபிடித்த விவசாய நுணுக்கங்களையும், ரகங்களையும் கொண்டுபோய் சேர்ப்பதும், அவர்களது பொருளாதாரத்தை உயர்த்துவதும்தான். நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து விவசாயிகளுக்கும், இளைஞர்களுக்கும் நான் கண்டறிந்த பயிர் ரகங்களையும், அதன் சாகுபடி முறைகளையும் இலவசமாக கற்றுத் தர விரும்புகிறேன். என் உயிர் இருக்கும் வரையும் இதுதான் லட்சியம். இதற்கு மத்திய, மாநில அரசுகள் உதவி செய்ய முன்வந்தால் நன்றாக இருக்கும் என்றார் அவர்.